# கிராமப்பஞ்சாயத்து

மார்ச் - 1932

இதழ்-2 எண்-

JL
Y31m211,N30
N32.2.6
160213

இதழ் II.

ரிஜிஸ்தர் நெ. M. 2623.

நெ. 6.

27.

# 'கிராமப் பஞ்சாயத்து.'

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

மார்ச்சு 1932

பிரசுரஞ் செய்வோர்,

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை.

# அடக்கம்.


பக்கம்.

1. பஞ்சாயத்து விசேஷ அதிகாரிகளும், ஜாயிண்ட் கமிட்டிகளும். 98
2. பத்திராதிபரின் குறிப்புகள் ... ... ... 102
3. விசேஷ அதிகாரிகள் செய்யவேண்டியவை ... ... 104
4. செய்யார் தாலூகா பஞ்சாயத்துகள் 1930-31 வருஷ வேலை விவரம் ... ... ... ... 110
5. திருவிதாங்கூரில் கிராமபஞ்சாயத்துகள் திவானின் பிரசங்கம் ... 116
6. மேல் கோதாவரி ஜில்லா கிராமப் பஞ்சாயத்து மகாநாடு தீர்மானங்களின் விவரம் ... ... ... 117


---

## சந்தா விவரம்.

பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு ரூபாய் 2.

மற்றவர்களுக்கு ... „ 3.

தனிப்பிரதி ... அணா 4.

## விளம்பர விகிதம்.

சஞ்சிகை மானேஜருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்,

**சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,**

ராயப்பேட்டை, சென்னை.

7 - JUN 1932
27.

# கிராமப் பஞ்சாயத்து.

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் II] 1932ஹு மார்ச்சு [இலக்கம் 6.

## பஞ்சாயத்து விசேஷ அதிகாரிகளும், ஜாயிண்ட் கமிட்டிகளும்.

கிராமப் பஞ்சாயத்துகளை ஏற்படுத்துவதற்காகக் கவர்ன்மெண்டார், லோகல் போர்டு சட்டம் 240-வது பிரிவின் கீழிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு விசேஷ அதிகாரிகளை நியமித்து வருகிறார்கள். குண்டூர் ஜில்லாவின் பிரதம ஸ்தாபகராகிய ம-ா-ா-ஸ்ரீ நாசிம்ம ராவ் சௌத்ரீயின் விடா முயற்சியின் பயனாக இந்த ஜில்லாவில் அத்தகைய அதிகாரிகள் நூற்றுக் கணக்காக நியமிக்கப்பட்டு வருகின்றனர். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பஞ்சாயத்திருக்கவேண்டுமென்னும் உத்தேசத்துடன் இவ்வாறு செய்யப் பட்டு வருகிறது. ஒவ்வோர் பிர்க்காவிலும் கூட்டுக் கமிட்டிகள் ஏற்பட்டு வருகின்றன. நமது பத்திரிகாசிரியர் ம-ா-ா-ஸ்ரீ ஹரிசர்வோத்தம ராவ் பந்துலுகாரு எம்.ஏ., ஸ்ரீமான் சௌத்ரியுடன் ஜில்லா முழுவதும் சுற்றுப்பிரயாணம்செய்து, அவர் செய்துவரும் வேலைக்குப் பேருதவியளித்து வந்திருக்கிறார். பஞ்சாயத்துகளை லோகல் போர்டுச் சட்டத்திற்குட்படுத்தி, அந்த ஸ்தாபனங்கள் கூடியமட்டில் பூர்ண சுதந்தரத்துடன் விளங்கவேண்டுமென்றும் நோக்கத்தைச் சாதிக்க, அரும்பாடுபட்ட இருவர்களில் ஒருவராகிய இவர், இவ்வேலையில் மனப்பூர்ணமாக ஈடுபட்டு வேலை செய்ய முற்போந்திருப்பது இயல்பே.

குண்டூர் ஜில்லாவிலுள்ள பற்பலத் தாலுக்காகளில் மகாநாடுகள் பிப்ரவரி ஆரம்பத்தில் கூட்டப்பட்டன. அதற்கப்பால் பிப்ரவரி மாதம் 19 உ முதல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிர்க்காவிற்கெனச் சென்று இடைவிடாதுவேலை செய்துக் கூட்டுக் கமிட்டிகள் ஸ்தாபிப்பதில் முனைந்து வேலை செய்திருக்கிறார். இவ்விதமாக இம்மாதம் 12உ முடியப் பிரயத்தனப் பட்டதனால் தற்சமயம் இந்த ஜில்லாவில் ஒரு பிர்க்காவிற்கொருக் கூட்டுக் கமிட்டி வீதம் ஏற்பட்டிருக்கிறது.

விசேஷ அதிகாரியென்றால் என்ன, கூட்டுக்கமிட்டி யென்பது எத்தகையது என்பனவற்றை இங்கு சற்று விளக்குவதவசியமாகிறது. 1930-ம் வருஷத்தில் சட்டம் திருத்தப்பட்டபிறகு பற்பல காரணங்களினால் பஞ்சாயத்தியக்கம் அபிவிருத்தியடையாமல் பிற்போக்கடையலாயிற்று. இதைப் பற்றி நாம் விரிவாகக் கவனிக்கவேண்டியதவசியமில்லை. அச் சட்டத்தில் பஞ்சாயத்தார்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. தேர்தலென்றால் வாக்காளர் ஜாபிதாவொன்றவசியமென்றேற்படுகிறது. பஞ்சாயத்து வாக்காளர்கள் தாலுகாபோர்டு வாக்காளர்கள் ஜாபிதாவிற்குட்பட்டவராயிருக்கவேண்டியிருக்கிறது. 1920-ம் வருஷத்தியற்றப்பட்டு பிறகு ரத்துசெய்யப்பட்ட பழையப் பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் ஏற்பட்ட விதிகளைக் கொண்டுப் பஞ்சாயத்து தேர்தலை நடத்தவேண்டுமென்று ஆரம்பத்தில் கவர்ன்மெண்டு உத்தேசித்துமிருந்தனர். அவ்விதம் செய்வது சட்ட விரோதமானதென்று நிபுணர்கள் கூறிவிட்டதனால், பஞ்சாயத்தமைப்புக் கொஞ்சகாலம் தடைபட்டு விட்டது. தாலுக்காபோர்டு வாக்காளர் ஜாபிதா தயாரானதும் அதிலிருந்து பஞ்சாயத்து வாக்காளர் ஜாபிதா ஏற்படத் தாமதமேற்படலாயிற்று. இவ்வாறிருக்கையில் கவர்ன்மெண்டிற்கு ஒரு நல்ல யோஜனை தோன்றலாயிற்று. புதிய லோகல் போர்டுகளை ஏற்படுத்த ஸ்பெஷல் ஆபீஸர்களை நியமிக்கசட்டத்தின் 240-வது பிரிவில் அவர்களுக் கதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தைக்கொண்டு ஒவ்வொரு கிராமத்திற்கு மொரு ஸ்பெஷல் ஆபீஸரை நியமித்துவிட்டால், அவ்விதமாக நியமிக்கப்படுபவர் பஞ்சாயத்திற்குள்ள அதிகாரத்துடன் அதன் தலைவராகவுமிருந்து 6 மாத காலம் வரை வேலை நடத்தலாம். அவ்விதமாக வேலைசெய்பவர் தமக்கடுத்தபடியாகப் பஞ்சாயத்து வேலையை மேற்கொள்ளத் தேர்தலை நடத்திப் பஞ்சாயத்தை ஸ்தாபிக்கக் கடமைப்பட்டுமிருக்கிறார். குண்டூர் ஜில்லாவில் ஏற்கனவே 300 பஞ்சாயத்துகள் வேலைசெய்து வருகிறதென்றறிந்து அந்த ஜில்லாவில் கவர்ன்மெண்டார் இவ் வேலையைத் துவக்கியிருக்கிறார்கள். ஆங்காங்குள்ள கௌரவ ஸ்தாபகர்கள் மூலம் ஒவ்வொருகிராமத்தின் நிலைமையையும் அறிந்துகொண்டு அங்கு ஸ்பெஷல் அதிகாரியாக வேலைசெய்ய யோக்யதையுடையவர் பெயரையும் ரெவின்யூ இலாகா, தாலுக்கா போர்டுத் தலைவர்கள், தங்களால் நியமிக்கப்பட்ட ஸ்தாபகர்கள் முதலியோர் மூலமாகத் தெரிந்துகொண்டு கிராமங்களை வரையறுத்து ஸ்பெஷல் ஆபீஸர்களை நியமித்திருக்கின்றனர். குண்டூர் ஜில்லாவில் முதலில் வேலை ஆரம்பிக்கப்பட்டிருப்பதன் காரணம் இதுதான். ஏற்கனவேயுள்ள சரியாக அமையப்பெற்றுள்ள நூற்றுக் கணக்கானப் பஞ்சாயத்துகளைத் தவிர, இந்த ஜில்லாவில் தற்சமயப், பஞ்சாயத்து, அதன் தலைவர்களுக்குள்ள அதிகாரத்தை வகிக்கும் பஞ்சாயத்து அதிகாரிகள் 200 பேரிருக்கின்றனர். ஸ்பெஷல் ஆபீஸர்களென்பவருக்குப் பூர்ண அதிகாரமுமிருக்கிறது. அந்த அதி



160213



காரத்தை அவர் பொறுப்பற்று உபயோகித்தல் முடியாது. பஞ்சாயத்து வேலையை நடத்தவே அதற்கான அதிகாரம் செலுத்த மாத்திரம் சட்டமிடமளிக்கிறது. தேர்ந்தெடுக்கப்படும் பஞ்சாயத்துத் தலைவர்களைக் காட்டிலும் இவ்வதிகாரிகளுக்குள்ள பொறுப்பு அதிகமெனலாம். இவர்கள் ஜனங்கள் நம்பிக்கையைப் பூராவாகப் பெறவேண்டியது அதியவசியமாகிறது. அந்தந்த கிராமத்திலிருக்கும் பெரியவர்களைக் கமிட்டிகளாகக் கூட்டி அவர்களை யோசனையைக் கேட்டறியவேண்டுமென்றும், கிராம ஜனங்களைத் திரட்டிப் பொதுக்கூட்டம் கூட்டி வரி முதலிய முக்கிய திட்டங்களை ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக அவர்கள் முன்னர் வைத்துச் சம்மதம் பெற்ற பிறகே வேலையை மேல் நடத்தவேண்டுமென்று கவர்ன்மெண்டினால் விதிகள் இயற்றப்பட்டிருக்கின்றன. அங்கொருவர், இங்கொருவரென்று எங்கேனும் சில விடங்களில் மாத்திரம் ஸ்பெஷல் ஆபீஸர்களை நியமித்தால் போதிய உற்சாகம் ஏற்படாதென்பதைக் கவர்ன்மெண்டுணர்ந்து ஒருங்கே வேலை நடத்த முற்போந்திருப்பதைக் காணத் திருப்தி ஏற்படுகிறது. இவ்விதம் ஏராளமாக ஒரே சமயத்தில் பஞ்சாயத்தமைப்பு ஏற்பாடுகள் நடைபெற்றிருப்பதனால், இவை ஒன்றோடொன்று போட்டியாகவும் திறமையாகவும் வேலை செய்யத் தலைப்படுவதுடன், ஒத்தைப் பஞ்சாயத்தாயிருப்பதைவிட ஜாயிண்டுக்கமிட்டிகளுமேற்படுத்தி மிக உபயோகமான வேலை செய்யவும் சந்தர்ப்பம் வாய்ந்திருக்கிறது. பஞ்சாயத்து அபிவிருத்தியில் சிரத்தைக்கொண்டுள்ள பொது ஜனங்களுக்கும் இப்பஞ்சாயத்துகள் வேலை நன்கு நடைபெற உதவிபுரிய இடமுமிருக்கிறது. ஜாயிண்டுடுக்கமிட்டிகள் பிர்க்கா வேலையை நன்றாக நடத்தத்தகுந்த இன்ஸ்பெக்டர்களை நியமித்து விட்டால், இவர்கள் மூலம் இதர இலாகாக்களின் வேலைகளும் கிராமவாசிகளின் சௌகரியங்களை நாடிச்செய்ய வழி பிறக்கும். கௌரவஸ்தாபகர்கள், லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் இலாகா அதிகாரிகள், பஞ்சாயத்துக் கணக்குகளைத் தணிக்கைசெய்யும் பொறுப்புற்ற ரெவினியூ இலாகா, மிருக வைத்தியம், சுகாதாரம், விவசாயம் முதலிய அபிவிருத்தி இலாகா அதிகாரிகள் இந்த இன்ஸ்பெக்டர்கள் மூலம் பஞ்சாயத்துகளின் நன்மையையும், கிராமவாசிகளுக் கனுகூலமான காரியங்களையும் சுலபமாகச் செய்யக்கூடும். குண்டூர் ஜில்லா பிர்க்கா கமிட்டிகளில் நிறைவேறியுள்ள பின்வரும் தீர்மானங்களைக் கவனிக்குமிடத்து இவ்வித நோக்கம் நிச்சயம் கைகூடுமென்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

ஜாயிண்டுக் கமிட்டிகள் நியமிக்கப்படும் விஷயத்தைச் சற்று விரிவுபடுத்திக் கூறவேண்டியதாகிறது. ஸ்பெஷல் ஆபீஸர்கள் நியமிக்கப்படும் இடங்களில் ஏற்கனவேயிருந்தப் பஞ்சாயத்துப் பிரதிநிதிகள் எவருமிருக்கக் கூடாது. ஆகையினால்தான் ஒவ்வொரு ஸ்பெஷல் ஆபீஸரும் அந்தப்பதவிக்கு வந்த மாத்திரத்தில் ஜாயிண்டுக் கமிட்டி யங்கத்தினராகவுமாகிறார்.

பஞ்சாயத்துகளிருக்கு மிடங்களின், அப்பஞ்சாயத்துத் தலைவர்களை மாத்திரம் ஜாயிண்டுக் கமிட்டிக்கு அதன் பிரதிநிதிகளாக அனுப்புவது இப்பொழுதுள்ள ஸ்திதியில் மிகவும் நல்லது. ஏனென்றால், தலைவர்தான் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியாகவு மிருக்கிறபடியால், ஜாயிண்டுக்கமிட்டிகளில் வந்துள்ள இதர ஸ்பெஷல் ஆபீஸர்களுடன் சமமாக நிர்வாக அனுபவத்தைப்பற்றி விவாதிக்கப் போதிய யோக்யதையுடையவரா யிருப்பார். ஜாயிண்டுக் கமிட்டித்தொகையில் மூன்றில் ஒரு பாகத்தினர் வெளியாரா யிருக்கலாமென்றிருக்கிறது. இந்த ஸ்தானங்களுக்குப் பஞ்சாயத்தில் உற்சாகமும், அனுபவமும், திறமையுமுள்ளவர்களை நியமித்தால் உபகாரமாக விருக்கும். குண்டூர் ஜில்லாப் பஞ்சாயத்துச் சங்கத்தினாதரவில் ஏற்பட்ட எல்லா ஜாயிண்டுக் கமிட்டிகளும் இவ்வண்ணமே அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு காணப்படும் உற்சாகத்தின் பெருக்கினால் அடிமுதல் சிகரம் வரை பற்பல ஸ்தாபனங்கள் ஒழுங்காகக் கட்டுப்பாட்டுடன் அமைந்திருக்கின்றன. குண்டூர் ஜில்லாவில் நடைபெறும் இவ்வேலையானது நீடித்துவருவதுடன் பிற ஜில்லாக்களுக்கும் ஓர் உதாரணமாக விளங்குமென்பதில் சந்தேகமில்லை.

விசேஷ அதிகாரிகள் 6 மாத கெடுவிற்குள் தாங்கள் செய்யக்கூடிய உபகாரமான வேலையைச் செய்து காட்டவேண்டுமென்பதை யுணரவேண்டும். இந்த ஆறுமாதம் லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் உத்தரவின் தேதியிலிருந்து கணக்கிடப்படும். இந்த உத்தரவு தோன்றிய தேதியிலிருந்து சம்பந்தப்பட்டவர் கையில் சேரச் சில சமயங்களில் 20 அல்லது 25 நாள்களாகின்றனவென்பதைக் கவனிக்கவேண்டும். இவ்விதமேற்படும் சந்தர்ப்பங்களில் வேலைசெய்யவேண்டிய கெடு இன்னும் குறைந்துபோக நேருகிறது. ஆகையினால், தாமதமோ தடையோ கூடாது. உத்தரவு தங்கள் கைக்குவந்த மறு நிமிஷமுதலே ஸ்பெஷல் ஆபீஸர்கள் சுறுசுறுப்பாக உழைக்கவேண்டும். பஞ்சாயத்து ஸ்பெஷல் அதிகாரிகள் உபயோகிக்கத்தக்க மாதிரித்தீர்மானங்கள் குண்டூர்ஜில்லாப் பஞ்சாயத்துச் சங்கத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்பெஷல் அதிகாரிகள் முதல் முதலாக அந்தப் பிரதேசத்தின் தேவைகளைக் கவனித்தறிந்துகொள்ளவேண்டும். அந்தக் கிராமத்திற்கு எத்தகையப் போக்குவரத்துச் சாதனங்கள் தேவை, குடிக்கும் ஜல சப்ளை வசதிகள் எவ்வாறிருக்கவேண்டும். அங்கு வருமான வழிகள்யாவை, இன்னும் எவ்விஷயங்கள் முக்கியமாக கவனித்துப் பரிகாரம் தேடப்படவேண்டும் என்னும் பலவற்றையும் விசாரித்தறிந்து ஏற்கனவே பிரஸ்தாபிக்கப்பட்ட மாதிரித்தீர்மானங்களை ஏற்ற வழியில்தயாரித்து, இவற்றை ஜில்லா கௌரவஸ்தாபகர் துவாராக லோகல் போர்டு இன்ஸ்பெக்டருக் கனுப்பவேண்டும். இவைத் தாமதமன்னியில் செய்யப்படவேண்டும். இவர்கள் கணக்கு முதலியன எழுதுவதற்குத் தேவையான





சகல புஸ்தகங்களையும் வாங்குவதற்குப் போதிய பணத்தையும் தம் கையிலிருந்து போட்டுச் செலவிடத் தயங்காமலுமிருக்கவேண்டும். ஜாயிண்டு கமிட்டிகளினால் நியமிக்கப்பட்ட இன்ஸ்பெக்டர் இருக்குமிடங்களில் அவரைக்கொண்டும், அவ்வாறில்லாதவிடங்களில் ஜாயிண்டு கமிட்டி அல்லது ஜில்லா ஸ்தாபனங்கள் எவற்றின் உதவியைக்கொண்டேனும் இந்தக்கணக்குப் புஸ்தகங்களைச் சரிவர எழுதிவைக்கவேண்டும். இந்த வேலை விவரங்கள் இப்பத்திரிகையில் வேறிடத்தில் விவரமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

சென்னை மாகாண கவர்ன்மெண்டின் பிரதம மந்திரி கனம் திவான் பகதூர் பி. முனுசாமி நாயுடுகாரு குண்டூர் ஜில்லாவைப்போல் இதர ஜில்லாக்களிலும் இவ்வேலை நன்றாக நடைபெறவேண்டியப் பிரயத்தனங்களை மேன்மேலும் செய்வாரென்று நாம் எதிர்பார்க்கிறோம். இந்த வேலைக்கு கர்த்தாவாகத் தோன்றிய திவான்பகதூர் என். கோபாலசாமி அய்யங்கார் வேறு வேலைக்கு மாற்றப்பட்டுவிட்டார். சென்னை கவர்ன்மெண்டின் மராமத்திலாகா காரியதரிசியாக அவர் வேலை ஒப்புக்கொண்டிருக்கிறார். இதனால் பஞ்சாயத்தியக்கத்திற் கேற்படும் நஷ்டம் எவ்வளவென்பதைச் சிந்திக்கவும் பயமாயிருக்கிறது. இந்த இயக்கத்தி னபிவிருத்திக்காக அவர் செய்துள்ள வேலைக்கு நம்மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஸ்ரீமான் டெம்போ, ஸ்ரீமான் கோபாலசாமி அய்யங்கார் ஸ்தானத்திற்கு வந்திருக்கிறார். பஞ்சாயத்து சேவகர்கள் சமூகத்திற்கு நல்வரவாகுக. அவர் ஸ்ரீமான்கள் கோபாலசாமி அய்யங்காரும், மிஸ்டர் ருதர்போர்டும் காட்டியிருக்கும் வழிபற்றி நடப்பாரென்று எதிர்பார்க்கிறோம். மிஸ்டர் ருதர்போர்டு ஒரு ஐரோப்பியரெனினும், பஞ்சாயத்து சம்பந்தமான பிரச்னைகளில் பஞ்சாயத்தபிமானிகள் இஷ்டத்தைத்தழுவி நடந்துகொண்டுளார். இவ்வேலைக்கு ஸ்ரீமான் டெம்போவை நாம் வரவேற்கிறோம்.

---

## பத்திராதிபரின் குறிப்புகள்.

**பஞ்சாயத்துகளின் கணக்குகளும் தஸ்தவேஜிகளும்.**

பஞ்சாயத்து ஸ்பெஷல் அதிகாரிகளும், பஞ்சாயத்து போர்டு தலைவர்களும் கிராம அபிவிருத்தியிலும், அதற்கேற்ற வேலைகளைச் செய்வதிலும் காட்டும் ஊக்கம், சிரத்தைக்கேற்பக், கணக்குகள் எழுதி வைப்பதிலும் இதர தஸ்தாவேஜிகளைச் சரியாக வைத்துக் கொள்வதிலும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

பஞ்சாயத்து அலுவல் நடப்பதற் காதாரமான முக்கிய தஸ்தாவேஜி, அதன் அலுவல்க் குறிப்புப் புஸ்தகமேயாகும். ஸ்பெஷல் பஞ்சாயத் ததிகாரிகள் மாத்திரம் இவ்விதமாக இரண்டு குறிப்புகள் வைத்துக்கொள்ளவேண்டும். ஸ்பெஷல் பஞ்சாயத்ததிகாரி தாம் பஞ்சாயத்து போர்டுத்தலைவர் என்ற ஹோதாவில் செய்யும் தீர்மானங்களை ஒரு புஸ்தகத்தில் எழுதிவைக்கவேண்டும். இரண்டாவது புஸ்தகத்தில் ஆலோசனைக் கமிட்டியின் தீர்மானங்களையும் பதிவு செய்யவேண்டும். ஆலோசனைக் கமிட்டி முக்கியமாக வேலைத்திட்டங்கள், அந்தக் கிராமத்தில் விற்பனையாகும் சரக்குகளின் கிரயத்தின்பேரில் வசூலிக்கவேண்டிய மாமூல் கட்டணங்கள், லைஸென்ஸ் சந்தா, கடன் வாங்கும் விஷயம், இதர வரி விஷயங்கள் முதலியவற்றைப்பற்றித் தேவையான யோசனைகள் கூற ஏற்பட்டன. பஞ்சாயத்திற்கென வரும் கடிதங்கள், அவற்றிற்கு எழுதப்படும் பதில்கள், பஞ்சாயத்தாபீசிலிருந்து எழுதப்படும் கடிதங்கள், செலவாகும் தபால்க்கூலி முதலிய யாவும் ஒரு புஸ்தகத்தில் எழுதிவைக்கப்படவேண்டும். இந்தப் புஸ்தகங்களில், கிடைக்கும் ஒவ்வொரு கடிதத்தின் விஷயமும் விரிவாக எழுதப்படவேண்டுமென்ற அவசியமில்லை. விஷயம் என்ன, எதைப்பற்றியது என்ற தகவல் மாத்திரம் எழுதிவைத்தால் போதுமானது. அவர் எழுதும் கடிதத்தின் நகல் ஒன்று வரிசைக்கிரமமாக நம்பர் போட்டு கோர்வையாக வைத்துக்கொள்ளப்படவேண்டும். உதிரிக்காகிதங்களில் கடிதம் எழுதுவதாயிருந்தால், அவற்றின் கீழ் கார்பன் காகிதம் வைத்துக் காப்பி எடுத்துச் சரியாக இலக்கமிட்டு வைத்துக்கொள்ளவேண்டும். இவ்விதம் எழுதுமிடங்களில் காப்பிப்புஸ்தகத்தில் பக்க எண்ணிக்கையை அக்காகிதங்களில் போட்டுக்கொள்ளவேண்டும்.

தீர்மானங்களின் பிரதிகளை ஸ்பெஷல் ஆபீஸர் தாலுகா போர்டுத் தலைவருக்கும், ஜில்லாபோர்டுத் தலைவருக்கும் அனுப்பிவைக்கவேண்டுமென்று முறையே லோகல்போர்டுச் சட்டத்திலும், G. O. 4261 L. & M உத்திரவிலும் விதிக்கப் பட்டிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் யாருடைய அனுமதி தேவையோ, அதற்கேற்ப ஸ்தலஸ்தாபன இன்ஸ்பெக்டருக்கோ, ஜில்லாக்கலெக்டருக்கோ அத்தீர்மானங்களை அனுப்பவும் வேண்டியதாகும். தற்சமயத்தில் பிரதம ஸ்தாபகர் (சீப் ஆர்கனைஸர்) உள்ள இடங்களில், அவருக்கு இத்தீர்மானங்களை யனுப்பினால் அவற்றை அந்த அதிகாரி தக்கச் சிபார்சுகளுடன் தேவையான அதிகாரிகளுக்கு அனுப்பிவைப்பார். குண்டூர் ஜில்லாவிலிருக்கும் ஜில்லா ஸ்தாபகர் இத்தகைய





வேலைகளைச் செய்யத் தயாராயிருக்கிறார் இவர் தீர்மானங்களின் பிரதிகளைத் தயாரித் தனுப்புவதற்காக ஒரு ஏற்பாடு கண்டுபிடித்திருக்கிறார். எல்லா ஸ்பெஷல் அதிகாரிகளும் அவ்வழிப் பிரகாரம் நடப்பது நலமாகவிருக்கும். குண்டூர் ஜில்லாவில் ஜாயிண்டுக் கமிட்டிகளேற்பட்டுத் தங்கள் வேலையை மேற்கொள்ளும்வரை எல்லா ஸ்பெஷல் ஆபீஸர்களும் அவர் மூலம் அந்தப் பிரதிகளை அவர் தயாரித்துள்ள மாதிரி எழுதியனுப்புவது சுலபமாகும். தினசரிக் குறிப்புப் புஸ்தகம்தான் ஸ்பெஷல் ஆபீஸர் எழுதவேண்டிய முக்கிய கணக்குப் புஸ்தகமாகும். நாள் தவறாது இக்கணக்குப் புஸ்தகம் சரிவர எழுதிவைக்கப்பட வேண்டும். கவர்ன்மெண்டு விதித்திருக்கும் வகையில் இக்கணக்குகள் எழுதப்படவேண்டும். வசூலாகும் பணத்திற்கு ரசீது எழுதிக்கொடுக்கவேண்டியதும், கொடுபடும் பணத்திற்குத் தக்க ரசீது எழுதி வாங்கிக்கொள்வதும் அதியவசியமான விஷயம். இவற்றிற்கென ஏற்பட்டுள்ள புஸ்தகங்கள் தவறாது வசம் இருக்கவேண்டும். தினசரிக் குறிப்பில் எழுதப்படும் விவரங்களுக்கு ஆதாரம் இவைதான். வரி விதிக்கும் பஞ்சாயத்துகள், வரிப் புஸ்தகங்கள், வரி கோரும் புஸ்தகங்கள் முதலியவற்றைக் கட்டாயமாக வாங்கி அவற்றைச் சரிவர எழுதிவரவேண்டும். இவைதான் தற்போதைய அவசியத்திற்கான புஸ்தகங்கள். இவ்வளவு புஸ்தகங்களும் சென்னையில் Hoe & Co. கம்பெனியிலிருந்து ரூ. 6-4-0-க்குக் கிடைக்கும். இக்கம்பெனியிலிருந்து புஸ்தகங்கள் வாங்கிக்கொள்ளலாமென்று லோகல் போர்டு இன்ஸ்பெக்டரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

**பஞ்சாயத்துகளின் பொறுப்பு.**

ஒரு கிராமத்தில் பஞ்சாயத்து ஏற்பட்ட மாத்திரத்தில் அவ்விடத்தில் முனிஸிபாலிடிகள் செய்வதைப்போல், விளக்குகள் முதலியன போடவேண்டுமென்றும் இதற்காகும் செலவு தொகைவரி விதிக்கப்பட வேண்டுமென்றும் நிர்ப்பந்த மிருப்பதாக நாட்டுப் புறங்களில் ஒரு தப்பபிப்பிராய மிருந்துவருகிறது. கிராமங்களிலிருக்கும் கிணறுகள், குளம் குட்டைகள் முதலியவற்றில் தண்ணீர் சுத்தமாக விருக்க வழி தேடவும் (பிரிவு 126), கோயில் முதலிய உற்சவங்கள் நடைபெற்றால் அவற்றை நடத்தும் தருமகர்த்தாக்களிடமிருந்துப் பண உதவிபெற்று உற்சவ காலங்களில் சுகாதார ஏற்பாடுகள்செய்யவும், பஞ்சாயத்தினால் நடத்தப்படும் சந்தை உற்சவங்களைச் சரிவர நடத்தவும் (பிரிவு 128) சுடலை இல்லாத விடங்களில் மயான பூமி ஏற்படுத்தவும் (பிரிவு 142), அபாயமாகத் தோன்றும் சுவறுகளையும், மரம் செடிகளையும், அவற்றின் சொந்தக்காரரிடமிருந்து பணம் வசூலித்து அழித்தோ வெட்டியோ அபாயத்தை நீக்கவும் (பிரிவு 148) சுத்தப்படுத்தமுடியாத அசுத்தமாகவுள்ளக் கிணறு குளம் குட்டைகளை அவற்றின் சொந்தக்காரரிடமிருந்து பணம் வசூலித்துக் கிராம சுகாதார நன்மைக்கேற்றவழியில் தூர்க்கவும் (பிரிவு 150) ஆடு மாடு அருந்தும் தொட்டிகளை ஏற்படுத்தி அதை உபயோகிப்பவரிடமிருந்துச் சந்தா வசூலிக்கவும் (பிரிவு 189) தான் ஸ்தலஸ்தாபனச் சட்டத்தில் நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. மேற்சொன்ன இனங்களுக்காகும் செலவு ஒன்று பொது ஜனங்களிடமிருந்து வசூலித்தாக வேண்டுமென்ற நிபந்தனையே இல்லையென்பதையும் வாசகர்கள் கவனிக்க வேண்டும். பஞ்சாயத்து எல்லைக்குள் வசிக்கும் ஜனங்களை உபத்ரவப் படுத்தாமல் எம்மட்டில் அவர்களுக்கேற்ற வழிகளில் சௌகரியம் செய்து

## விசேஷ அதிகாரிகள் செய்யவேண்டியவை.

ஸ்பெஷல் ஆபீஸர்கள் எனப்படும் விசேஷ அதிகாரிகள் "பஞ்சாயத்தும் அதன் தலைவரும் செய்யக்கூடிய அலுவல்களைச் செய்து அவற்றை நிறைவேற்றி வைப்பதற்காக" வென்று ஏற்பட்டுள்ளார்கள் பிரிவு 240 (1) 1922-ம் வருஷத்தில் இயற்றப்பட்ட 2-வது சட்டமாகிய மதராஸ் ராஜவிசுவாசப் பிரமாணச் சட்டத்தில், ஸ்தலஸ்தாபனங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவரும் அதற்கு நியமனம் செய்யப்படுபவர்களும் அந்த ஸ்தானங்களை வகிக்குமுன்னர் அச் சபைக் கூட்டமொன்றில் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து விசேஷ அதிகாரி பஞ்சாயத்தாகவும் அதன் தலைவராகவும் நியமிக்கப்படுகின்றமையால், அந்தப் பொறுப்பை வகிக்குமுன்னர் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்யவேண்டும். அவரேப் பஞ்சாயத்துமாகையால், அலுவல் குறிப்பு புஸ்தகத்தில் முதல் தீர்மானமாகத்தாமே தமது ராஜவிசுவாசப் பிரமாணத்தைப் பதிவுசெய்துவிட்டால் போதுமானது. அவர் செய்யும் விசுவாசப் பிரமாண வாசகம் பின்வருமாறிருக்கவேண்டும் :—

"போர்டு மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கும் அ. வே. ஆகிய நான் சத்யமாகக் கூறுவது என்னவென்றால் மாக்ஷிமைதங்கிய இந்திய சக்கிரவர்த்தியிடமும், அவர் புத்திரர் வார்சுகளிடமும் உண்மையான விசுவாச பக்தியுடனிருந்து, நான் செய்யப்புகும் கடமையை விசுவாசத்துடன் செய்து முடிப்பேன்".

---

(103-ம் பக்கம் தொடர்ச்சி)

கொடுக்கலாமோ அவ்வளவும் பஞ்சாயத்தினால் செய்வது சாத்யமாகும். கிராமங்களில் தெருக்களை வாரமொருமுறையேனும் கூட்டிச் சுத்தமாக வைத்துக்கொள்வது, கவர்ன்மெண்டிடமிருந்து கிராண்டுத் தொகையைப்பெற்று அதைக்கொண்டுக் கிராமத் தெருக்களிலிருந்து பெரிய ரஸ்தாவிற்குப் போய்ச்சேர நல்ல வண்டித் தடங்கள் போடுவது, முதலிய வேலையைப் பஞ்சாயத்துகள் ஆரம்பத்தில் மேற்கொள்ளக் கூடியசில நல்ல வேலைகளாகும். பஞ்சாயத்துக் கிராமங்களில் ஜனங்கள் சம்மதிக்காத வரிகளைக் கட்டாயமாக விதித்து வசூலிப்பதற்கு இப்போதுள்ளச் சட்டத்தில் இடமேயில்லை. இதை யுணர்ந்துகொண்டால், கிராமவாசிகள் எவரும் பஞ்சாயத் தேற்படுவதை ஆட்சேபிக்க மாட்டார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். பஞ்சாயத்துகள் நேர்மையாகவும் இடைவிடாமலும் வேலை செய்துகொண்டே போனால் கூடிய சீக்கிரத்தில் கிராமங்களில் சகல சௌகரியங்களும் மேற்பட வழி தேடக்கூடுமென்பது திண்ணம்.

---





இப்பொழுது நியமிக்கப்படும் ஒவ்வொரு ஸ்பெஷல் ஆபீஸரும் கிராமவாசிகளில் 10 பேரை ஆலோசனைக்கமிட்டியாக நியமித்துக் கொள்ளவேண்டுமென்று கவர்ன்மெண்டறிவித்திருக்கிறது. ஆகையினால் ஸ்பெஷல் ஆபீஸர் அனாவசியமாகத் தாமதிக்காமல் இந்தக் காரியத்தைச் செய்து முடிக்கவேண்டியது இரண்டாவது விஷயம். ஆலோசனைக்கமிட்டிக்கு நியமிக்கப்படுபவர்கள் கிராமவாசிகளின் ஆதரவைப் பெற்றவராயிருக்கவேண்டும். இவ்விதம் நியமிக்கப்படுபவர்கள் ஸ்தலஸ்தாபன போர்டு மெம்பர்களாகமாட்டார்களாகையினால் விசுவாசப் பிரமாணம் செய்யவேண்டியதில்லை.

பஞ்சாயத்தின் அலுவல் குறிப்பு எழுதுவது முதற்கொண்டு சகல காரியங்களுக்கும் பணம் தேவை யென்பது ஸ்பெஷல் ஆபீஸருக்குத் தெரிந்துள்ள விஷயமே. இதற்கானத் தொகையை அவர் தம் கையிலிருந்து நன்கொடையாகவோ அல்லது கடனாகவோ போட்டுக்கொள்ளவேண்டும். நன்கொடையாகப் பணம் கிடைத்தால் அதைப் பெற்றுக்கொண்டு கொடுத்தவருக்கு வந்தனம் கூறுவதாகவோ அல்லதுக் கடனாகவிருந்தால், அந்தக் கடன் தொகையை வாங்கிக்கொள்வதென்றோ அலுவல் குறிப்பு (மினிட்ஸ்) புஸ்தகத்தில் எழுதிக்கொள்ள வேண்டும்.

ஸ்பெஷல் ஆபீஸர்கள் 6 மாதகாலம்வரைதான் அந்த அதிகாரம் செலுத்தலாமென்று பிரிவு 240 விதிக்கின்றமையால், அவர்கள் பஞ்சாயத்து தேர்தல்களையும் அந்த கெடுவிற்குள் நடத்தியாகவேண்டும். (உட்பிரிவு 2) ஸ்பெஷல் ஆபீஸர்கள் அந்தக் கிராமத்தில் தங்கள் பெயர் பிரபலமாக விருக்க விரும்பினால் அவர்கள் அதற்கேற்பச் சுருசுருப்பாகவேலை செய்யவேண்டும். கிராமங்களுக்கு அவசியமானவை என்ன, எந்த ரஸ்தாக்களைப் போடவேண்டும், எந்தக் கிணறு வெட்டப்படவேண்டும், சுத்தஜலம் கிடைக்கவழி என்ன உண்டு, வேறு எவ்விதமான சௌகரியங்கள் செய்து கொடுக்கக்கூடும் என்னும் விஷயங்களை விசாரித்து நிதானித்தறிந்து ஒரு முடிவிற்கு வந்து, கிராம அபிவிருத்திக்கு எவ்வித வேலைத் திட்டம் போடப்படவேண்டுமென்று தீர்மானங்களை பதிவு செய்துகொள்ள வேண்டும். இத்திட்டங்களைப் பூர்த்தி செய்விக்க ஆகும் செலவு தொகைப் பாதியைப் பஞ்சாயத்தார் கொடுப்பதாகவும், பாக்கித்தொகையைக் கவர்ன்மெண்டு கிராண்டாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானம் நிறைவேற்றி வைக்கவேண்டும். அந்த பஞ்சாயத்து எல்லையில் பள்ளிக்கூடம் இல்லாதிருந்தால் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படவேண்டியது அவசியமென்றும் ஒரு தீர்மான மூலம் வற்புறுத்தவேண்டும். 5 வருஷகாலம் தொடர்ச்சியாக வேலைசெய்துத் திருப்திகரமாக முடிக்கக்கூடிய வேலை திட்டங்கள் தயாரித்தால் அந்த பஞ்சாயத்திற்கு நன்மை ஏற்பட ஸ்திரமான வழி பிறக்குமென்று நாம் கூறுவோம்.

அன்றாடம் உபாயமாகக் கிடைக்கும் மனிதரைக்கொண்டு தினசரி அலுவலை நடத்துவது பயன்படாத காரியமாகும். ஆகையினால், ஸ்பெஷல் அதிகாரி கிராமத்தார்கள் எதிர்க்காமல் மனப்பூர்த்தியாகச் சம்மதிக்கும் இனங்களைக்கொண்டுக் கிரமமான வழியில் நல்ல வருமானத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். செஸ்வரியில் 3 பைஸீதம் பெறலாமென்று கூறப்பட்டிருப்பதை முதலில் கவனிக்க வேண்டும். இவ்விதமாகச் சேரும்பணத்தைச் சரியானவழியில் விநியோகிக்க

வேண்டும். இதைக் கவர்ன்மெண்டிற்குத் தீர்மான மூலமாக எடுத்துக் கூறவேண்டியது ஒவ்வொரு ஸ்பெஷல் அதிகாரியின் பொறுப்புமாகும். சர்க்கார் வருஷம் ஏப்ரல் முதல்தேதி ஆரம்பமாகிறது. இதைத் தவிர, இதர வருமானங்களுக்கு இடம் யாதேனுமிருந்தால் அதைத் தெரிந்துகொண்டு உடனே வரப்பற்றுதல் நலம். பஞ்சாயத்தினால் சேகரிக்கப்படும் குப்பை கூளம் வதி அசுத்த முதலிய யாவும் லோகல் போர்டுச் சட்டப்பிரகாரம் பஞ்சாயத்தைச் சேர்ந்தவையாகும் (பிரிவு 61). இவற்றைப் பஞ்சாயத்தார் தங்களாள்களைக் கொண்டோ ஏஜெண்டு மூலமோ திரட்டக்கூடும். தினசரி கூட்டிச் சேர்க்க முடியாமற்போனால் வாரமொரு முறையேனும் திரட்டிவரும்பக்ஷத்தில் பஞ்சாயத்திற்கு நல்ல வருமானம் கிடைப்பதுடன், பல தலைமுறைகளாகக் கண்டறியாதச் சுகாதாரச் சுத்தியைக் கிராமத் தெருக்களிலும் பொது ஸ்தலங்களிலும் பார்த்துக்களிப்புறவும் நேரும். புறம்போக்குகளில் குவியும் செடி கொடி இலைகளும் பஞ்சாயத்துக்குச்சொந்தமான குப்பையாகும். இவற்றை விற்றும் பஞ்சாயத்துக்குப் பணம் சேர்க்கலாம். ஆனால் ஜில்லா போர்டு தாலுகா போர்டு ரஸ்தாக்களில் விழும் குப்பைகள் அந்தந்த போர்டுகளுக்குச் சேரவேண்டியது. அவற்றைப் பஞ்சாயத்து வாரி எடுத்துக்கொள்ள விரும்பினால் அந்த போர்டுகளின் அனுமதி பெறவேண்டும். குண்டூர் ஜில்லா போர்டில், இந்த உரிமைப் பஞ்சாயத்துகளுக்கு விட்டிருப்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதர ஜில்லா போர்டுகளும் அவ்விதமே செய்வது விரும்பத் தக்கது. தாலுகா போர்டுகளும் சொற்பமேயாகையால் அவைகூட அவ்வண்ணமே செய்யலாம். புறம்போக்கு மரங்களின் அனுபவ பாத்யம் சட்டப் பிரகாரம் பஞ்சாயத்திற்குச் சொந்தமில்லை. இவை சம்பந்தமுள்ள இலாகாக்கள் அந்த பாத்யதையை மாற்றவேண்டியதாகும். இதைச் செய்வது மிகவும் சுலபமே. ஸ்பெஷல் ஆபீஸர்கள் இதற்கான தீர்மானங்களைப் பதிவு செய்து அவற்றின் பிரதியொன்றை சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கு அனுப்பினால் போதும். மராமத்திலாகாவிற்குட்பட்ட வாய்க்கால் சாக்கடை யோரங்களிலிருக்கும் புறம்போக்கு பாத்யங்களும் அவ்விதமே பஞ்சாயத்துகளுக்கு மாற்றப்படும் என்று எதிர்பார்க்கக் கூடாது. இந்தப் புறம்போக்கு அனுபவ பாத்யதையையும், குளம் வாய்க்கால்களில் மீன்பிடிக்கும் அதிகாரமும் பெறவிரும்பின் மராமத்திலாகா (P.W.D.) விற்கு மனுச்செய்துகொள்ள வேண்டும். D. Dis. No. 30937 (6-10-1931) of Local Boards Inspector). இதுகூடத் தேவையான வழியில் தீர்மானமாக நிறைவேற்றிப் பதிவானபிறகே மனுச்செய்துகொள்ளப்படவேண்டும். புறம்போக்கு பாத்தியங்களைப் பஞ்சாயத்திற்கு மாற்றக்கோருவதாயிருந்தால், ஸர்வே நெம்பர், விஸ்தீரணம், மரங்களின் தொகை, அவற்றின் சுமார் மதிப்பு முதலிய பலவிதத் தகவல்களும் கூடுமானவரையில் சரியாக மனுவில் குறிப்பிடப்படவேண்டும். தீர்மானத்தின் வாசகம்கூட ஸ்பெஷல் ஆபீஸரினால் சரிவரத் தழுவப்படவேண்டும். இது பரியந்தம் தாலுகா போர்டுக்குச் சொந்தமான இந்தக் குளம் குட்டை இதர புறம்போக்கு முதலியனப் பஞ்சாயத்து வசம் விடப்பட்டிருக்கிறதென்பதாக எழுதப்படவேண்டும். இவற்றினின்றும் கிடைக்கும் வருமானம் அவர்களைச் சேர்ந்ததாகும். கவர்ன்மெண்டும் சமீபத்தில் பிறப்பித்துள்ள G.O. நெம்பர் 4060-ல் தாலுக்கா போர்டுகணக்கில் செலுத்தப்பட்டு வந்திருக்கும் குளங்களில் மீன் பிடிப்பதனால் கிடைக்கும் வசூலை அந்த எல்லையிலிருக்கும்





பஞ்சாயத்துகள் கணக்கில் சேர்ப்பிக்குமாறு ஜில்லா கலெக்டர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறது. ஸ்பெஷல் ஆபீஸர்கள் இந்த வருமானத்தை கைநழுவவிடக்கூடாது. இந்த உத்தரவு எல்லா மைனர் இரிகேஷன் குள வருமானங்களையும் குறிக்குமென்றே நாம் நம்புகிறோம்.

இவை தவிர நேராக வரிவிதித்துப் பஞ்சாயத்துச் செலவிற்குத் தேவையானப் பணம் வசூலிக்கும் பாத்யம் ஒன்றுமிருக்கிறது. லோகல் போர்டுச் சட்டத்தில் ஏற்பட்டுள்ள லைஸன்ஸ் கட்டணம் விதிக்கும் அதிகாரம் நல்ல வருமானம் தரக்கூடியது. லோகல் போர்டு சட்டம் ஷெட்யூல் 7-ல் லைஸன்ஸ் வாங்கவேண்டிய சில முக்கிய விஷயங்கள் ஜாபிதாவாக எழுதப்பட்டிருக்கின்றன. சோடாக்கடை, காப்பிக்கடை, சாப்பாட்டுக்கடை, ஆராக் ஷாப்புகள், விற்பனைக்காக மண்ணெண்ணெய் சேகரித்து வைப்பது, சுலபமாகத் தீப் பிடிக்கக்கூடியதான வைக்கோல், புல், பிரிகள், மரம், விறகு, கரி, மத்தாப்பு வாணம் வெடி மருந்துகள் செய்தல், நெல் குத்தும் இயந்திரம், கடலைக்கொட்டை யறைக்கும் இயந்திரம், பருத்திக்கொட்டை யடிக்கும் இயந்திரம் முதலியவற்றை வைத்து நடத்துதல், பானை, செங்கல், ஓடு சூளை போடுதல், தோல்கள் பதனிடுதல், கொழுப்பு உருக்குதல், கழிக்கப்பட்ட குப்பை, உதரம், எலும்புகள், தோல், மீன் முதலிய அபாயமும், ஆபாசமுமான சாமான்களைச் சேகரித்து வைத்தல் முதலிய காரியங்கள் லைஸன்ஸ் பெற்றுதான் செய்யப்படவேண்டுமென்றிருக்கின்றமையால் பஞ்சாயத்துகள் இவற்றிற்கான கட்டணம் விதிக்கலாம். எவ்வளவு கட்டணம் விதிக்கலாமென்பதை யூனியன் போர்டு என்று வழங்கப்பட்ட பஞ்சாயத்துகளில் இருந்த வழக்கத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். இவ்விதமாகச் சேரும் தொகையைச் சுலபமாக வசூலிக்க ஸ்பெஷல் ஆபீஸர் ஏற்பாடு செய்யவேண்டும். பஞ்சாயத்து எல்லைக்குள் மார்க்கெட்டுகளிருந்தால் அவற்றின்மூலமும் நல்ல வருமானம் கிடைக்கும். அவை பஞ்சாயத்து மார்க்கெட்டுகளாயிருந்தால் அங்கிருந்து கிடைக்கும் தொகைப் பஞ்சாயத்தைச் சேரும். வேறு யாருக்கேனும் அவைச் சொந்தமாயிருப்பின், அவர் வசூலிக்கும் தொகையில் ஒரு பாகத்தைப் பஞ்சாயத்திற்குக் கொடுக்குமாறு கட்டாயப்படுத்தலாம். தாலுக்கா போர்டு மார்க்கெட்டுகள் விஷயத்தில் மாத்திரம், அவைப் பஞ்சாயத்துகளுக்கு என்ன வீதம் கொடுப்பதென்பதைக் கவர்ன்மெண்டு நிர்ணயிக்கவேண்டும், (பிரிவு 168, ஷெட்யூல் V, விதி 5, உட்பிரிவு 8, பிரிவு 171). வண்டி நிறுத்துமிடம், மாட்டுக்கொட்டில்கள் முதலியவும் இவ்விதமாகவே வருமானம் தரும் இனங்களாகும். (பிரிவு 184-187). இந்த வசூல் பூராவும் பஞ்சாயத்துக்குச் சேரவேண்டியது. பஞ்சாயத்து எல்லையிலுள்ள பொதுஜன உபயோகத்திலிருக்கும் ரோடு ஓரத்திலிருக்கும் காலி இடத்தையோ, இதர மனைகளையோ தாத்காலிகமாகக் குத்தகைக்கு விட்டு அந்தத் தொகையையும் பெற்றுக்கொள்ள பஞ்சாயத்திற்குரிமையுண்டு. அந்த எல்லைக்குள்ளிருக்கும் சத்திரம், சாவடிகளிலிருந்தும் வருமானம் எதிர்ப்பார்க்கலாம். (பிரிவு 161). ரோட்டோரத்திலிருக்கும் இடங்களை மாத்திரம் குத்தகைக்கு விடுவதில் கவர்ன்மெண்டு 1924-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 15உ பிறப்பித்த உத்திரவு நெ. 991, L. & M.-ல் குறிப்பிட்டுள்ள விதிகளுக்குட்பட்டு நடந்துகொள்ளவேண்டும். பிணங்களை அப்புறப்படுத்த ஏற்படும் சுடுகாடு விஷயமாக, அவைப் பொதுஜன உபயோகத்திலிருந்தாலும் சரி,

அல்லது தனிப்பட்ட எவர் வசமாயிருப்பினும், பஞ்சாயத்திடமிருந்து லைஸன்ஸ் கட்டாயமாகப் பெற்றபிறகே அந்த உபயோகத்திற்கு விடப்படலாம். (141). பஞ்சாயத்திற்குச் சொந்தமான எந்த ஸ்தலத்திலும், அல்லது ரோட்டோரத்திலிருந்து 20 கஜ தூரத்திற்குள்பட்ட இடத்திலுமிருந்து மண், கல் வெட்டியெடுப்பதாயிருந்தால் பஞ்சாயத்தினால் விதிக்கப்படும் கட்டணத்தைச் செலுத்தி லைஸன்ஸ் வாங்கியாகவேண்டும். (151). நாய், பன்றிகள், தெருவில் போவதானால் லைஸன்ஸ் வாங்கவேண்டும். (154) சாமான்களோ, பிராணிகளோ விற்பனைக்கு வந்து பஞ்சாயத்து எல்லையில் பொது ஸ்தலத்தில் எங்கு வைக்கப்பட்டிருந்தாலும், அதற்கும் பணம் கொடுத்து லைஸன்ஸ் வாங்கவேண்டும். (183). பொதுஜன வாசஸ்தலச்சட்டம் (1888-ம் வருஷம் II-வது சட்டம்) என்றோர் சட்டமிருக்கிறது. மாகாணக் கவர்ன்மெண்டு இஷ்டப்படுமிடங்களில் இதை அமுலுக்குக் கொண்டுவரலாம். பஞ்சாயத்தார் இச்சட்டத்தின் அனுகூலத்தைப் பெற்றால் அவ்வூருக்கு வரும் நாடகம், ஸினிமா முதலியவை நடைபெறுமிடங்களுக்கு லைஸன்ஸ் விதித்துச் சுலபமாக நல்ல வருமானம் பெறலாம் (பிரிவு 198) பொது ஸ்தலத்தில் ஆக்ரமிக்கும் தாத்காலிகமாக அமைக்கப்படும் பந்தல்கள், தாழ்வாரங்கள், ஜன்னல்கள், வேனல் மறைவுகள் மழை, வெயில், தடுக்குகள் யாவற்றிற்கும் எங்கிருந்தாலும் லைஸன்ஸ் வாங்கப்படவேண்டும். (பிரிவு 160). லைஸன்ஸ் வாங்கத் தவறினாலும், பஞ்சாயத்தின் உத்தரவுகளைக் கீழ்படியாவிடினும், அபராதங்களும் அதிகக் கட்டணங்களும் விதிக்க இடமிருக்கிறது. இவை யாவும் பஞ்சாயத்திற்கே சேரவேண்டியவை. பஞ்சாயத்துக் கிராமம் யாதேனும் யாத்ரீகர்கள் வந்து போகும் ஸ்தலமாயிருக்குமேயாகில் அந்த எல்லைக்குள் வருபவர்களுக்கு யாத்ரீகர் வரி விதிக்கவேண்டுமென்றுப் பஞ்சாயத்து ஜில்லா போர்டைக் கேட்டுக்கொள்ளவேண்டும். அதன் பேரில் ஜில்லாபோர்டு அந்தப்பிரதேசத்தில் வண்டியோட்டும் ரயில்வே அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, இதன் மூலமாக வசூலிக்கப்படும் யாத்ரை வரியை அப் பஞ்சாயத்திடம் சேர்ப்பிக்க வேண்டும். (பிரிவு 110).

மைசூர் சமஸ்தானத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் தொழிலாளர் வரியொன்று விதிக்கப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமையன்று கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்காரரும் பஞ்சாயத்துவேலைக்கொரு ஆளையனுப்பவேண்டும். இவ்விதம் அனுப்பமுடியாதவர்கள் அந்தச்செலவிற்காக வருஷத்திற்கு ரூ. 6-12-0 பஞ்சாயத்திற்குப் பணமாகக் கொடுக்கவேண்டும். பொது மராமத்து வேலைக்கு ஆள் அனுப்புவதென்பது பழையகால வழக்கம். பொது நன்மையை உத்தேசித்து இவ்வழக்கத்தை நீடித்துவருவது விரும்பத்தக்கது. மாகாண கவர்ன்மெண்டின் அனுமதியின் பேரில் பஞ்சாயத்து இவ்வரியை விதிக்கலாம், (பிரிவு 75 (2)]. இது உண்மையில் வரியென்று கொள்ளக் கூடாது. விஷயங்களைப் பூர்த்தியாகக் கூறும் வண்ணம் பஞ்சாயத்து விதிக்கக்கூடிய நேர் வரியையும்பற்றி இங்கு சொல்லிவிடலாம். பெரும்பாலான இடங்களில் இந்த வரிகளை விதிக்க வேண்டிய அவசியம் ஏற்படவேயில்லை, ஸ்தல ஸ்தாபனச் சட்டத் திருத்த மேற்படுவதற்கு முன்னர் இருந்த யூனியன் போர்டுகளல்லாதப் பஞ்சாயத்துகளில் கவர்ன்மெண்டின் அனுமதி பெற்று வீட்டு வரி வசூலிக்கப்படலாம். [பிரிவு 75





உட்பிரிவு (i) இனம் (ii)]. ஜில்லா போர்டு எல்லாப் பஞ்சாயத்துகளிலும் தொழில் வரியென்று நேராக விதிக்கலாம்.

இதுவரை குறிப்பிடப்படாத அதிக வருமானம் தரக்கூடிய முக்கியமான வழிகளும் பல விருக்கின்றன. முனிஸிபாலிடிகளில் ரோடு போடுவதற்கும், சுத்த ஜலம் சப்ளை செய்யவும், ஆகும் செலவில் சரிபாதியும், பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர் சம்பளம் கொடுக்க ஏற்படும் செலவு பூராவையும் தாம் கொடுப்பதாகக் கவர்ன்மெண்டு ஒப்புக்கொண்டிருக்கிறது. நில ஸெஸ்ஸில் கிடைக்கும் 3 பை விகிதப் பணமும், கவர்ன்மெண்டு செலுத்தும் தொகையும் இதர வருமானங்களுமடங்கிய கிராம அபிவிருத்தி நிதியிலிருந்து பணம் எடுத்துக்கொள்ளப் பஞ்சாயத்திற்கு என்றும் உரிமையுண்டு. சரியான திட்டங்களைக்கிரமமான காலத்தில் தயாரித்து அச்செலவிற்குப் பணம் தேவையென்று மனுக்கொடுக்கும் பக்ஷத்தில், மேற்சொல்லிய பணத்தைப்பெற்றுக் கிராம அபிவிருத்திக்கேற்ற வழியில் உற்சாகத்துடன் வேலை செய்ய வழிபிறக்கும் கிராம அபிவிருத்தி நிதியிலிருந்து கால் பாகம் கிராண்டு எதிர் பார்க்கலாம்.

இந்த வியாசத்தில் நாம் கூறியுள்ள சகல உபாயங்களையும் கொண்டு பணம் பெறவேண்டுமென்று நாம் கூற முன்வரவில்லை; அவ்விதம் வசூலிப்பதும் உசிதமாகவும் இராது. எவ்வழியில் அபிவிருத்தி செய்யக்கூடுமென்பதைக் காட்டவே இவை இங்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. ஸ்பெஷல் ஆபீஸர்கள் ஒவ்வொருவரும் அந்தந்தக் கிராமத்திற்கேற்றவை யாவை என்பதை அந்தக் கிராம ஜனங்களுடன் கலந்து யோசித்துக்கொள்ளவேண்டும். இந்த வியாசத்தில் கூறப்பட்டிருக்கும் அனேக விஷயங்கள் பொருந்தும் வழியில் குண்டூர் ஜில்லா பிரதம ஸ்தாபகர், மாதிரித் தீர்மான நகலொன்று தயாரித்திருக்கிறார். இவை ஸ்பெஷல் ஆபீஸர்களுக்கும் ஜாயிண்டுக் கமிட்டிகளினால் நியமிக்கப்படும் இன்ஸ்பெக்டர்களுக்கும் உபகாரமாக விருக்குமென்பதில் சந்தேகமில்லை.

# செய்யார் தாலுகாப் பஞ்சாயத்துகள்.

## 1930-1931-ம் வருஷ வேலை விவரம்.

செய்யார் தாலுகா போர்டு தலைவர் ஸ்ரீமான் டி. ஆதிகேசவலு நாயுடு தம் தாலுகா போர்டு எல்லைக்குள்ளிருக்கும் பஞ்சாயத்துகள் 1931-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந்தேதியோடு முடிவுற்ற முந்திய வருஷத்தில் செய்துள்ள வேலை நிர்வாகத்தைப்பற்றிப் பின்வரும் ரிபோர்ட்டு அனுப்பியிருக்கிறார் :—

"பஞ்சாயத்துகள் நிர்வாக யாதாஸ்து எவ்விதம் தயாரிக்கப்படவேண்டுமென்று கவர்ன்மெண்டு சென்ற அக்டோபரில் தான் ஒரு அறிக்கை வெளியிட்டபடியால், அந்த முறையில் தயாரிக்கப்பட்ட ரிபோர்ட்டுகள் 201 பஞ்சாயத்துகளிலிருந்து தான் கிடைத்திருக்கின்றன. இவற்றைக்கொண்டே இந்த யாதாஸ்து தயாரிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப வருஷத்தில் 1920-ம் வருஷத்தியக் கிராமப்பஞ்சாயத்துச் சட்டம் ரத்தாகி, பஞ்சாயத்துகள் 1930-ம் வருஷம் இயற்றப்பட்ட ஸ்தல ஸ்தாபனச்சட்டத்தின் கீழ் வந்தன. இச்சட்டம் 1930-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் அமுலுக்கு வந்து பஞ்சாயத்துகள் தாலுக்கா போர்டுக்குட்படுத்தப்பட்டிருக்கின்றன.

பஞ்சாயத்துகளேற்படுத்தும் அதிகாரம் இந்த தாலுகா போர்டுக்கு 1925 26-ம் வருஷம் அளிக்கப்பட்டது. அப்பொழுது முதல் வேலை செய்ததில் இங்குள்ள 429 பெரிய கிராமங்களைக்கொண்டு 290 பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவை பின் வரும் பிர்க்காக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன—

செய்யார் தாலுக்கா.

| | | | |
|---|---|---|---|
| 1. | அனக்காவூர் | பிர்க்கா .. | 25 |
| 2. | வால்கடை | ,, ... | 21 |
| 3. | மேல்மா | ,, ... | 24 |
| 4. | செய்யார்கஸ்பா | ,, ... | 20 |
| 5. | வெம்பாக்கம் | ,, ... | 17 |
| 6. | பெருங்காட்டூர் | ,, ... | 18 |
| 7. | தூவி | ,, ... | 16 |
| | மொத்தம் | ,, ... | 141 |

வந்தவாசி தாலுக்கா.

| | | | |
|---|---|---|---|
| 1. | வந்தவாசி | பிர்க்கா .. | 27 |
| 2. | தேசூர் | ,, ... | 27 |
| 3. | பேர்ணமல்லூர் | ,, ... | 23 |
| 4. | நெடுங்குணம் | ,, ... | 25 |
| 5. | சாலவேடு | ,, ... | 24 |
| 6. | தெள்ளார் | ,, ... | 26 |
| | மொத்தம் | ,, ... | 149 |

இந்த வருஷத்தில் 18 பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டன, ஒன்றும் எடுபடவில்லை. 28 பஞ்சாயத்துகள் சரியாக வேலை செய்யவில்லையாகையால் அவற்றை ரத்து [illegible]வேண்டுமென்று லோகல் போர்டு இன்ஸ்பெக்டருக்கு எழுதப்பட்டிருக்கிறது.





5 தேர்தல்கள்.—புதுச்சட்டப்பிரகாரம் தேர்தல் நடைபெறும்வரை பழைய பஞ்சாயத்தார் வேலை செய்யலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வருஷம் 17 பஞ்சாயத்துகளில் தேர்தல் நடந்தன. போட்டியென்பது அதிகமாகவில்லை. ஜனங்களின் சுபாவத்திற்கேற்ப கவர்ன்மெண்டு இரகசிய வோட்டு முறையை எடுத்திருப்பது நல்ல காரியம். பஞ்சாயத்திற்கேற்றவர்களை எந்த ஜாதியிலிருந்தும் யாரும் தேர்ந்தெடுக்க அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. முந்திய வருஷத் தேர்தல்களில் ஒவ்வொரு ஜாதியிலும் அவர்களுக்குள் திறமையானவர் யாரென்று பார்த்து அவரைப் பலரும் சம்மதித்து நியமித்து வந்தனர். அப்பொழுதிருந்தவாறு வயது வந்த ஒவ்வொருவருக்குமுள்ள வாக்குரிமை இப்பொழுது குறைக்கப்பட்டிருப்பது வருத்தமாயிருக்கிறது. ரெஜிஸ்திரார் ஜனரலினால் தயாரிக்கப்பட்டுள்ள பற்பல யாதாஸ்துகளிலிருந்தும், வயது வந்தவர்கள் யாவருக்கும் வோட்டுரிமையிருந்ததனால் தேர்தல் முடிவு திருப்திகரமாயிருந்ததென்று ஏற்படுகிறது. வாக்குரிமை விஷயமாகக் கவர்ன்மெண்டுப் புதிய சட்டத்தைப் பழைய சட்டத்தைப் போலிருக்குமாறு திருத்துவார்களென்று நம்பப்படுகிறது.

### பஞ்சாயத்துக் கூட்டங்கள்

இதுவரை ரிபோர்ட்டு அனுப்பியிருக்கும் 201 பஞ்சாயத்துகளிலும் மொத்தம் கணக்கெடுத்ததில் 1139 கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. சில பஞ்சாயத்துகள் சட்டப்பிரகாரம் மாதமொரு தடவைகூடக் கூடாமலுமிருந்திருக்கின்றன. அனேகப் பஞ்சாயத்துகளில் தேவைக்கேற்றவாறு அலுவல் நடத்தப் பலதடவைகளும் கூட்டம் நடைபெற்றிருக்கின்றன.

நிர்வாகம்.—பஞ்சாயத்து நிர்வாகத்தை நடத்த ஏற்பட்டுள்ள செலவு ஒன்றுமேயில்லை. எழுதவேண்டிய சொற்ப விஷயங்களும் போர்டு தலைவர்களாலோ, அல்லது பள்ளிக்கூட உபாத்தியாயர்களாலோ கவனிக்கப்பட்டு வந்திருக்கின்றன. புதிய சட்டத்தின்கீழ் தலைவரே வரி வசூலிக்கவேண்டியிருப்பதனால் இவர்களுக்குக் கொஞ்சம் அதிக வேலை ஏற்படலாம். கணக்கு எழுதுவதைச் சுலபமாகச்செய்தால் ஒரு குமாஸ்தா நியமிக்கப்படவேண்டிய அவசியமுமிராது. பஞ்சாயத்துகளுக்கு அனுப்பவேண்டிய கவர்ன்மெண்டு உத்தரவுகள் ஏராளமாக வந்துகொண்டிருக்கின்றன. இவை யாவும் தினசரி அலுவல் சம்பந்தப்பட்டதாயிராததனால் பஞ்சாயத்துகளைப்பற்றியச் சில முக்கியமான உத்தரவுகளை மாத்திரம் தாய்பாஷைகளில் மொழிபெயர்த்து பஞ்சாயத்துகளுக்கு வினியோகிக்க லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் ஏற்பாடு செய்யலாம்.

வருமானம்.—இங்குள்ளப் பஞ்சாயத்துகளுக்குப் பொதுவாகப் பின்வரும் வழிகளில் வருமானம் கிடைத்திருக்கின்றன: (1) மீன்பிடித்தல், (2) சாணம்விற்றல், மரங்களின் காய்கனிகளை விற்றல், (3) லைசன்ஸ் கட்டணங்கள் முதலியன. பஞ்சாயத்தில் கிராம மாமூல் சம்பிரதாயங்களைத் தழுவிப்பணம் வசூலிக்க ஏற்பட்டிருந்த பல பாத்தியங்கள் புதிய சட்டமூலம் குறைந்துபோயிருக்கின்றன. கிராமத்தாருக்குப் பொதுவாகச் சொந்தமாயிருக்கும் [illegible] பாத்யம், ஆயக்கட்டு மராமத்துக்காகக் கட்டாயமாகக் கிராமத்[illegible] வற்

புறத்துவது அல்லது வேலை செய்யமுடியாதவர் அந்த வேலைக் கூலிக்கேற்ற தான்யம் அல்லது பணத்தைக் கொடுப்பது, வயல்களில் பயிரைக் காவலிட ஒரு காவற்காரனை நியமிப்பது, உள்ளூர் வேலைக்காரர் கூநீணிக்காமல் அவரவர் பாரம்பரைத் தொழிலைக் கைவிடாது செய்துவருவதற்காகக் கிராமத்தார் ஒவ்வொருவரும் அவர்களுக்குப் புராதன முறையில் இவ்வளவு படி தான்யம் கொடுப்பதென்னும் அனுஷ்டானங்களை வற்புறுத்துவது முதலியவற்றிற்கு 1930-ம் வருஷத்தியப் புதியச் சட்டத்தில் இடமில்லை. பழய சட்டம் 23-வது விதிப்பிரகாரம் குடி மராமத்து பார்த்யதையை வற்புறுத்தக் கூடாதென்பது கவர்ன்மெண்டு சமீபத்தில் பிறப்பித்திருக்கும் உத்தரவிலிருந்து ஏற்படுகிறது. 74-வது பிரிவின் (ii)-வது உட்பிரிவின்கீழ் நிலவரி விதிக்கக்கூடாதென்பது அந்த உத்தரவின் பொருளாகையால் ரெஜிஸ்திரார் ஜெனரல் எழுதியுள்ளவண்ணம் "நீர்ப்பாசன சாகுபடி எல்லைகளில் கிராம அனுஷ்டானத்தைத்தழுவி ரயத்துகளுக்கு அனுகூலம் செய்யப் பஞ்சாயத்துகளுக்கு இடமில்லாமலிருக்கிறது." பழைய அனுஷ்டானப்பிரகாரம் கிராமத்தார் கட்டாயமாக வேலைசெய்ய நிர்ப்பந்திக்கப்படலாம். இப்பொழுது அதுசாத்யமாகாது. குடி மராமத்து வேலையைக் கட்டாயப்படுத்துவதற்கு இடமிருக்குமாறுச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதைக் கவனித்துத் தேவையான வழியில் சட்டத்தைத் திருத்த முயற்சி சீக்கிரமே செய்யப்படுமென்று இன்ஸ்பெக்டர் கூறியிருப்பது திருப்திகரமாயிருக்கிறது.

கிராமங்களில் வசிப்பவர்கள் பெரும்பாலும் ஏழைகளாயிருக்கின்றமையால் தொழில் வரி மூலம் அதிகப்பணம் வசூலிக்கமுடியாதென்று எண்ணி ஒரு கிராமத்திலும் இந்த வரி விதிக்கப்படவில்லை.

மாட்டை யடைத்துவைக்கும் டௌண்டின் வருமானத்தைப் பஞ்சாயத்திற்குக் கொடுக்கமுடியாதென்று கவர்ன்மெண்டு 9-4-31-ம் தேதியிட்ட G. O. 1169-ம் நம்பர் உத்தரவில் கூறியிருக்கின்றனர். தற்சமயம் விதிக்கப்படும் பௌண்டுக் கட்டணம் இரட்டிப் புயர்த்தப்பட்டிருக்கின்றமையால் பௌண்டு நிர்வாகம் லாபகரமாக விருக்குமாகையால் இதைப் பஞ்சாயத்திடம் கொடுத்துவிடலாம். கவர்ன்மெண்டு இவ்விஷயமாகப் புனராலோசனை செய்வது நலமாகும்.

காடுகள் ரெவின்யூ இலாகாவிடமிருக்கின்றமையால் இவற்றின் நிர்வாகத்தைப் பஞ்சாயத்திடம் மாற்ற முடியாமல் 65, 66-B, C பிரிவுகள் பிரயோஜனமற்றிருக்கின்றன. இந்த வழியில் பஞ்சாயத்துகளுக்குப் போதிய வருமானம் கிடைக்காததனால் வனபரிபாலன விஷயமாகத் தங்கள் பொறுப்பை சரிவரவகிக்கச் சக்தியற்று, சாணம், மரக்கனிகள் முதலியவற்றை விற்றும் இதரச் சில்லரை வரிகள் மூலமும் பணம் திரட்டவேண்டியிருக்கிறது. எல்லா வேலைகளும், ஆள்களைத் திரட்டியும் நன்கொடை வசூலித்தும், கடன்கள் வாங்கியும் நடத்தப்படுகின்றன.

கல்வி:—31—3—31-ல் பஞ்சாயத்துகளால் நடத்தப்பட்டப் பள்ளிக்கூடங்கள் மொத்தம் 196. இவற்றில் வேலை பார்த்துவந்த உபாத்யாயர்கள் 286. வருஷக் கடைசியில் இவற்றில் படித்துவந்த மாணாக்கர்கள் 8744. ஆதி திராவிடச் சிறுவர்களுக்காகவென்று 13 பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. உபாத்யா





யர்கள் தேவையான யோக்யதைக்குக் குறைவில்லாதவர்கள். ஸ்கூல் பைனல் படித்த உபாத்யாயர்கள் 60 பேர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த ஜில்லாவில் உபாத்யாயர்ப் பயிற்சி யளிக்க வசதியில்லாததனால் உபாத்யாயர்களுக் கேற்றப் பயிற்சி யளிக்கமுடியவில்லை. 25 பஞ்சாயத்துகள் ரூ 25,000 செலவிட்டுப் பள்ளிக்கூடங்களுக்காகப் பக்கா ஓட்டுக் கட்டிடம் கட்டியிருக்கின்றன. இப்பள்ளிக்கூடங்களுக்கு தாலுகா போர்டு ரூபா. 900-ம், லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் ரூ 25,000-மும் உதவி யளித்திருக்கிறார்கள். தாலுகா போர்டினால் அப்பாலும் ரூ. 3,000 லிருந்து ரூ. 3,675 வரையில் செலவிடப்பட்டிருக்கிறது. அப்பால் 10 பஞ்சாயத்துகள் ரூ. 10,000 மதிப்புள்ளக் கட்டிடங்கள் கட்டியிருக்கின்றன. இவைத் தாமதித்து நேர்ந்தமையால் மாகாண கிராண்டைப் பெற முடியவில்லை. அடுத்த வருஷத்திலேனும் கவர்ன்மெண்டு இவர்களுக்குச் சிறிதளவு கிராண்டு கொடுக்குமென்று நம்பப்பட்டு வருகிறது. மொத்தம் ரூ. 54,000 மதிப்புள்ள 47 கட்டிடங்களிருக்கின்றன. கீத்துக் கூரையிடப்பட்டப் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களிலும் இடவசதி விசாலமாயிருப்பதாகத் தெரிகிறது. கவர்ன்மெண்டாவது லோகல் பண்டாவது கொஞ்சம் பண உதவி யளிக்க முன்வரின் எல்லாப் பள்ளிக்கூடங்களையும் சீக்கிரம் ஓட்டுக் கட்டிடமாக்கிவிடலாம். பள்ளிக்கூடம் கட்டமனைகள் ஒவ்வொரு பஞ்சாயத்து பேராலும் மாற்றப்பட்டிருக்கின்றன. சிலவற்றைத்தவிர அனேகமாக எல்லாப் பள்ளிகளும் ஜில்லாக் கல்வி சபையாரின் அங்கீகாரம் பெற்றிருக்கின்றன. 500 மாணாக்கர்களுக்கு மேற்பட்ட எல்லாப் பஞ்சாயத்துகளிலும் பள்ளிக்கூடங்களேற்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்துப் பள்ளிகளுக்கருகிலிருக்கும் போர்டு பள்ளிகளை உயர்தர ஆரம்பக் கல்வியளிப்பதற்கு லாயக்கானதாகச் செய்ய முயற்சிகள் நடந்து வருகின்றன. தாலுகா போர்டு வசம் 3 மத்திய பள்ளிக்கூடங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்ற ஜூனியர் பள்ளிக்கூடங்கள் யாவற்றையும் பஞ்சாயத்து வசம்விட ஏற்பாடாகி வருகிறது. கல்வி யதிகாரிகளங்கீகாரம் கிடைத்ததும் அடுத்த வருஷமே இந்த ஏற்பாடுப் பிரகாரம் நடத்தப்படும். தாலுகா போர்டின் ஸெஸ் வருமானத்தில் ரூபாய்க்கு 3 பை வீதம் பஞ்சாயத்துகளுக்கு மாற்றவேண்டுமென்று லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் செய்த ஏற்பாட்டினால் போர்டின் வரவு செலவுதிட்டம் சரிகட்டப்படுவது சிரமமாகிவிட்டபடியால், கிராமங்களில் கட்டாயக் கல்வி யனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படுவது தற்சமயம் சாத்யமில்லாமற் போய்விட்டது. பஞ்சாயத்துகளுக்குப் போதனை கிராண்டு கொடுப்பதைத் தாலுகா போர்டு மூலம் வினியோகிப்பதென்று கவர்ன்மெண்டு ஏற்பாடு செய்தால் இரட்டிப்பு வேலை நீங்குவதுடன் எங்கும் ஒரேவிதமான கொள்கை யனுஷ்டிப்பதும் சாத்யமாகும். பள்ளிக்கூடப் பாராமரிப்புப் பஞ்சாயத்துகள் வசம் விடப்பட்டுத் திருப்திகரமாக நடந்திருக்கிறது. உபாத்தியாயர்களுக்கு உபரி ரஜா கொடுக்கும் அதிகாரம் பஞ்சாயத்துகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரம் நியாயமாகச் செலுத்தப்பட்டிருக்கிறது.

வாசகசாலை.—கிராமாந்திர வாசகசாலைகளுக் கேற்பட்ட கிராண்டிலிருந்து 24 பஞ்சாயத்துகள் ரூ. 1,028 பெற்றிருக்கின்றன. தாலுகா போர்டும் அதன் பணத்தைக்கொண்டு உபாத்யாயர்களுக் குபயோகப்பட 5 உயர்தர ஆரம்பக்கல்விப்

பள்ளிக்கூடங்களில் வாசகசாலைகளேற்படுத்தியிருக்கின்றது. கிராமவாசிகள் இவ் வாசக சாலையை உபயோகித்து வந்திருக்கின்றனர்.

சுகாதாரம்:—80 பஞ்சாயத்துகளில் தடாகங்களில் குடிக்கும் தண்ணீர் என்று விளம்பரம் ஒட்டி காவல் போடப்பட்டிருக்கின்றன. தண்ணீரை அசுத்தப் படுத்தியதாக 2 பஞ்சாயத்துகளில் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுப் பிறகு குற்ற வாளிகள் தப்பிதம் செய்ததற்கு உண்மையாக வருந்துவதாக மன்னிப்புக் கோரவே விடுதலை யடைந்தனர். காவற்காரர் சம்பளத்திற்காக ரூ 165 செலவாயிருக்கிறது.

சப்பாத்திபூச்சிகள் பலப் பஞ்சாயத்துகளால் வளர்க்கப்பட்டுச் சப்பாத்திக்காடு அழிக்கப்பட்டிருக்கின்றன. சில பஞ்சாயத்துகளில் ரூ. 600 வரை கூலி கொடுத்துச் சப்பாத்திக் காடுகள் அழிக்கப்பட்டன. அனேகப் பஞ்சாயத்துகளில் மொத்த மாகச் சேர்த்து ரூ. 140 செலவிடப்பட்டுச் சுகாதார வேலை நடைபெற்றிருக்கிறது. குடிக்கச் சுத்த ஜலத் தடாகங்களைச் சீர்படுத்த இவ்வருஷம் ரூ. 2,156 செலவா யிருக்கிறது, சென்ற வருஷத்தில் இதே வேலை நிமித்தம் செலவான தொகை ரூ. 17,500. தாலுகா போர்டில் பண முடை ஏற்பட்டதனாலும் பஞ்சாயத்து களுக்குக் கொடுபடவேண்டிய கால் வீதம் தொகை அனுமதிக்கப்படாததனாலும் அவை செய்யக்கூடிய பெரிய வேலைகள் நடத்த முடியாமற் போய்விட்டது கிராம அபிவிருத்தி நிதியில் கால் பாகம் தொகைப் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றிருப்பது ஒரு நல்ல விஷயம். இந்த நிதியிலிருந்து பணமுடையுள்ள பஞ்சாயத்துகளுக்குத் தக்க உதவி யளிக்கப்படுமென்று நம்பப்படுகிறது.

12 ரோடுகள்:—அரை கிராண்டு முறையில் கிராம ரஸ்தாக்கள் போடுவதற் காக மாகாண நிதியிலிருந்து ரூ. 1,352 எடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷம் சுமார் 20 மைல் ரோடு போடப்பட்டது ஆனால் இவ்வருஷத்தில் பணமில்லாத தனால் இந்த ரோடுகளைச் சரியாகச் செப்பனிட்டுப் பராமரிக்க முடியாமற்போனது துக்கிக்கக்கூடிய விஷயம். கிராம ரோடுகள் போடக் கவர்ன்மெண்டு சிறிது தொகை கொடுத்துதவுகிறதெனினும் அந்த ரோடுகளைச் செம்மைப்படுத்தி வைத்துக்கொள் ளப் பணம் கொடுப்பதில்லை ஜில்லா போர்டேனும் ரோடுகளை நகம்வாரிப் பிரித்து அந்த ஸ்தலத்தில் ஆதீனம் வகிக்கும் ஸ்தல ஸ்தாபனங்களிடம் அவற்றின் மராமத்து மேற்பார்வை முதலியவற்றைப் பொறுப்படைக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது. கவர்ன்மெண்டு, 24—3—'31-ம் தேதியிட்ட உத்திரவு நெ. 990 L. & M -ம் கிரா மப் பஞ்சாயத் தெல்லையிலிருக்கும் எல்லாப் பொது ரஸ்தாக்களும் பஞ்சாயத்துக் குட்பட்டவையென்று விதித்திருப்பினும் ரெவின்யூ இலாகா அவற்றைக் கைவிட வில்லை. ஆக்ரமிப்பு முதலிய பல உபத்ரவங்களைத் தடுக்கப் பஞ்சாயத்துகளுக்குப் போதிய அதிகாரங்களில்லை. ஓரிடத்தில் பஞ்சாயத்தின் ஆக்ஞையின் பேரில் ஒரு ரயத்து தம் வீட்டு வாசலில் ஒரு தென்னைமரம் நட்டார். அதைக் கலெக்டர் நிர்ப்பந்தப்படுத்தித் தோண்டி எடுத்துவிட்டதுமல்லாமல் அதன் சொந்தக்காரருக்கு ரூ. 4 அவராதமும் விதித்தார். பஞ்சாயத்து தலைவர் என்ன ஆக்ஷேபித்தும் பயன் படவில்லை. இவ்விஷயம் கவர்ன்மெண்டிற் கறிவிக்கப்பட்டிருக்கிறது.

விளக்குகள்:—ஒரு பஞ்சாயத்தில் தெருக்களுக்கு விளக்குப் போட ரூ. 123 செலவிடப்பட்டிருக்கிறது.





வைத்திய வசதிகள்,—கிராமாந்திர ஆஸ்பத்திரி ஏற்படுத்த நல்லூர் பஞ்சாயத் திற்கு ரூ. 500 தாலுகா போர்டினால் இவ்வருஷம் கொடுத்துதவப்பட்டது.

மார்க்கெட்டுகள்.—தாலுகா போர்டுக்குச் சொந்தமான சில்லரை மார்க் கெட்டுகள் பஞ்சாயத்து வசம் விடப்பட்டன.

## வரவு செலவு.

20 பஞ்சாயத்துகளின் மொத்த வரவு செலவு விவரம் பின் வருமாறு:—

வரவு.

| | ரூ. |
|---|---|
| ஆரம்பக் கையிருப்பு ... | 5,080 |
| 1. வரி, அவராதங்கள் ... | 1,275 |
| 2. சாணம், கனி, காய்கள் விற்பனை ... | 2,827 |
| 3. குடி மராமத்து ... | 600 |
| 4. மான்யம் வசூல் ... | 2,830 |
| 5. ரோடுகள்— | |
| கவர்ன்மெண்டு கிராண்டு | 1,352 |
| தாலுகா போர்டு ... | 574 |
| பஞ்சாயத்து வசூல் ... | 778 |
| 6. ஜல சப்ளை கவர்ன்மெண்டு உதவி ... | 1,078 |
| ஜலசப்ளை தாலுகாபோர்டு. | 471 |
| ஜலசப்ளை பஞ்சாயத்து வசூல் ... ... | 607 |
| 7. கல்வி— | |
| கவர்மெண்டு கிராண்டு ... | 43,966 |
| சாமான்கள் ... | 70 |
| வாசகசாலை ... | 1 028 |
| கட்டிடங்கள் ... | 8,625 |
| தாலுக்போர்டு கிராண்டு. | 900 |
| பஞ்சாயத்து வசூல் ... | 14,975 |
| 8. ஆஸ்பத்திரிக் கட்டிடம் ... | 500 |
| மொத்தம் ... | 87,536 |

செலவு.

| | ரூ. |
|---|---|
| 1. நிர்வாகம்: காரியாலயச் செலவுகள் ... | 597 |
| 2. ரோடுகள் ... | 2,704 |
| 3 சுகாதாரத்திற்காக— | |
| 1 ஜலசப்ளை குளம் செப்பனிட ... | 2,156 |
| 2 சப்பாத்தி அழிக்க ... | 600 |
| 3. குளம் காவல் ... | 165 |
| 4 சுகாதார வரிக்கொண்டாட்டம். ... | 149 |
| 5. விளக்குப்போட ... | 123 |
| 6. ஆஸ்பத்திரி கட்ட தாலுக்கா போர்டுக்குக் கொடுத்தது ... | 500 |
| 4. கல்வி— | |
| உபாத்யாயர் சம்பளம் ... | 43,840 |
| இதரச் செலவுகள் ... | 1,179 |
| சாமான்கள் ... | 101 |
| வாசகசாலை ... | 1,028 |
| பள்ளிக்கூடம் கட்ட ... | 24,500 |
| 5. கடன் திருப்பிக் கொடுத்த வகையில் ... | 2,864 |
| 6. சில்லரையாக .. | 564 |
| கையிருப்பு ... | 6 466 |
| மொத்தம் ... | 87,536 |

கவர்ன்மெண்டு தாலுகாபோர்டு கண்ட்ரிபூஷன்களைத் தவிரப் பஞ்சாயத்துகள் மாத்திரம் கடனாகவும், நன்கொடையாகவும், வேலையாகவும் திரட்டிய தொகை ரூ 30,000 ஆகும். இவை பூராவும் பொதுஜன உபயோகத்திற்கென செலவிடப் பட்டிருக்கிறது.

பஞ்சாயத்துக் கணக்குத் தணிக்கை ரெவினியூ இலாகா வசம் விடப்பட்டி ருக்கிறது. சில கணக்குகள்தான் தணிக்கை செய்யப்பட்டிருக்கின்றன. குறைந் தது வருஷமொரு முறையேனும் இக்கணக்குகளைத் தணிக்கைசெய்வது நலமா யிருக்கும். இதற்கவசியமான ஏற்பாடுகளை லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் செய்ய வேண்டுமென்பது என் கோரிக்கை. பஞ்சாயத்துக் கையிருப்புத் தொகையை ஸேவிங்ஸ் பாங்கியில் போடுவதென்ற முயற்சி பலமாக நடந்துவந்திருக்கிறது.

## திருவிதாங்கூரில் கிராமப்பஞ்சாயத்துகள்.

### திவானின் பிரசங்கம்.

சென்ற 10-ந்தேதியன்று கூடிய திருவாங்கூர் சமஸ்தான ஸ்ரீமூலம் ஜனப்பிரதிநிதி சபையில் அவ்வூர் திவான் மிஸ்டர் டி. ஆஸ்டின் செய்த பிரசங்கத்தில் கிராமப் பஞ்சாயத்துகளைப்பற்றிப் பின் வருமாறு பேசியிருக்கிறார். "எனக்கு முந்தியிருந்த திவான் சென்ற வருஷம் கூடிய சபைக்கூட்டத்தில் 1100-ம் வருஷத்திய ஏழாவது சட்டப்பிரகாரம் கிராமப் பஞ்சாயத்துகள் ஆரம்பிக்கச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை எடுத்துக் கூறினார். திவான் பேஷ்கார் யோசனையைக்கொண்டு 6 இடங்களில் முதலில் கிராமப்பஞ்சாயத்தேற்படுத்துவதென்று பின் வரும் கிராமங்கள் பொறுக்கப்பட்டன. திருவனந்தபுரம் டிவிஷனில் பூசபாண்டியும் நெடுமங்காடும், கொல்லம் டிவிஷனில் பரவூரும் சாம்பர்வடகரையும், கொட்டாயம் டிவிஷனில் எட்டுமானூரும், பெரும் ஆரும் ஏற்ற கிராமங்களாக எடுக்கப்பட்ட, சாம்பூர் வடகரை தவிர மற்றப் பகுதிகள் மேற்கூறிய சட்டப்பிரகாரம் கிராமங்களாகுமென்று 3-வது பிரிவு உட்பிரிவு (3)-ன் கீழ் சென்ற பிப்ரவரியில் அறிவிக்கப்பட்டது. சாம்பூர் வடகரை கிராம வாசிகள் தங்கள் கிராமத்தைப் பஞ்சாயத்தாக்கக்கூடாதென்று மனுக் கொடுத்ததனால் அதைப்பற்றி யோசிக்கவில்லை. கிராமநிதிக்கு 44 (3)-வது விதிப்பிரகாரம் செலவிட ரூ. 6,000 வரவு செலவு திட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கிராமங்களில் பஞ்சாயத்துகள் வேலை செய்யும் விதத்தைத் தெரிந்துகொண்ட பிறகு இதர கிராமங்களில் பஞ்சாயத்தேற்படும் விஷயம் ஆலோசிக்கப்படும்."

---

(115-ம் பக்கம் தொடர்ச்சி)

தாலுகா போர்டுப் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களை மேற்பார்வையிட கவர்ன்மெண்டனுமதிபெற்றுப் பொதுச் செலவில் 2 பேரையும் சூபர்வைஸர்களாக நியமித்து வேலை நடந்துவந்திருக்கிறது. ஒவ்வொருவரும் 65 பள்ளிக்கூடங்கள் பார்வையிட்டு அவற்றை உயர் ஸ்திதியில் வைக்க உபகாரம் புரிந்து வந்திருக்கிறார்கள். கிராம அபிவிருத்தி, வரி விதிக்கும் விஷயம், நல்வாழ்விற்கான யோஜனைகள் பல இவர்களால் ஆங்காங்கு கூறப்பட்டு வந்திருக்கின்றன. உபாத்தியாயர்களுக்குச் சரிவர மாதச்சம்பளம் கொடுக்கவும், போதனைத் திறமையாகவிருக்கவும் இவர்கள் வழி தேடி வந்திருக்கின்றனர். இவ்விஷயம் வேறிடத்தில் விரிவாகக் கூறப்படும்.

போது.—"இதுவரைப் பஞ்சாயத்துகள் தங்களுக்குக் கிடைத்த தொகையைக்கொண்டு செய்திருக்கும் நல்லவேலைகள் புகழத்தக்கனவே. பஞ்சாயத்துகள் சர்க்கார் அதிகாரிகள் மேற்பார்வையிலிருந்த வரையில் மிகத் திருப்திகரமாக வேலைசெய்து வந்திருக்கின்றனவென்று எழுத்துமூலம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இனிப் பஞ்சாயத்துகளை ஏற்படுத்தி அவற்றை விருத்திசெய்யவேண்டிய பொறுப்பு உத்தியோகப்பற்றற்றவர் வசம் விடப்பட்டிருக்கிறது. சாகுபடி நிலங்கள் மீது வரி விதித்தல், குடி மராமத்துவேலை முதலிய விஷயமாக இப்புதியச் சட்டம் திருத்தப்படவேண்டிய அவசியத்தை நான் ஆரம்பத்திலேயே தெரிவித்திருக்கிறேன். 60 A, B, C, பிரிவில் காணப்படும் பற்பல வேலைகளைக் கவர்ன்மெண்டு பொறுப்புணர்ந்திருக்கும் ஸ்தாபனங்கள்வசம் மாற்றவேண்டும். லோகல் போர்டுகள் தங்கள் திகாரங்களையும், பணத்தையும் கொஞ்சம் தாராளமாகப் பஞ்சாயத்துகளிடம் விட்டு அனுதாபங்கொண்டு அவற்றுடன் மனப்பூர்த்தியாகச்சேர்ந்து சரியானவழியில் ஒத்துழைக்க முற்படுமேயாகில் கிராமங்கள் உண்மையான முன்னேற்றமடைந்து நாட்டுப்புற நிர்வாகம் புராதன மேன்மை ஸ்திதிக்கு வந்து செழிப்பாகவிருக்குமென்பதில் சந்தேகமில்லை."



## மேல் கோதாவரி ஜில்லாக் கிராமப் பஞ்சாயத்து மகாநாடு.

### தீர்மானங்கள் விவரம்.

நிடதவோலில் சென்ற முதல் தேதியன்று ஸ்ரீமான் வெங்கடப்பையா தலைமையில் கூடிய மேல் கோதாவரி ஜில்லாக் கிராமப்பஞ்சாயத்து மகாநாட்டில் பின் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன :—

1. மேல் கோதாவரி ஜில்லாவில் பஞ்சாயத்துகள் வேலை செய்வதற்கு காரணமாயிருந்த (1) மிஸ்டர் டி. ஜி. ரதர்போர்டு, .ஸி. ஐ. ஈ., ஐ ஸி. எஸ், (2) ராவ் பகதூர் என். கோபாலசாமி அய்யங்கார், பி. ஏ., பி. எல்., (3) வெ. பெத்தராஜு காரு, பி ஏ., பி.எல்.. முதலியோர்பால் நன்றியுற்றிருப்பதை அறிவித்துக்கொள்ளுகிறது.

2. கவர்ன்மெண்டினால் கொடுக்கப்படும் பாதி கிராண்டுத் தொகையைக்கொண்டு பஞ்சாயத்து நடத்தவேண்டிய வேலை செய்யப்படுகின்றமையால், தற்கள் கப்பிசரளை அளவு சுருங்குவதைக் கணக்கெடுக்கக்கூடாதென்றும், ரோடில் பரப்புவதற்கு முன்னதாக அந்த ஸ்தலத்தில் கொட்டப்பட்டிருக்கும் தளவாடங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் தொகையில் ஒரு பகுதி முன்னதாகக் கொடுக்கப்படவேண்டுமென்றும் இம்மகாநாடு லோகல் போர்டு இன்ஸ்பெக்டரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

3. பஞ்சாயத்தின் நன்மைக்காக வேலை செய்பவர்கள் நீர்ப்பாசன ஏரி குளங்களில் மீன் பிடிக்கக்கோரிய அனுமதியை பஞ்சாயத்துக் கிராமங்களில் கட்சிச் சச்சரவுகளிருக்கும் காரணத்தைக்கொண்டு ரெவினியூ இலாகா அளிக்க மறுப்பது நியாயமில்லையாகையால், அவ்விதம் மறுத்திருப்பதை மாற்றிக் கலெக்டர் அந்த உரிமையைக் கோரும் பஞ்சாயத்தாருக்களிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று இம்மகாநாடு கலெக்டரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

4. பஞ்சாயத்துக் கிராம அபிவிருத்தியையும், நாட்டுப்புறப் புனருத்தாரண வேலைகளைச் செய்யவும் நான்கு அல்லது ஐந்து பஞ்சாயத்துகளாகச் சேர்ந்து ஒரு சூபர்வைஸரை நியமித்துக்கொள்ளவேண்டுமென்று இம்மகாநாடு பஞ்சாயத்துகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

5. கவர்ன்மெண்டு கிராமங்களிலும் கவர்ன்மெண்டுக்குச் சொந்தமாயிராத கிராமங்களிலும் ஒவ்வொரு பட்டாவிலும் வசூலாகும் செஸ் தொகை விவரத்தையும் ரெவினியூ வசூல் கணக்கில் காட்டவேண்டுமென்று இம்மகாநாடு கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளுகிறது.

6. தணுக்கு, கொவ்வூர் தாலுகாக்களுக்குத் தனித்தனி சூபர்வைஸர் நியமிக்கப்படும்வரை இப்பொழுது பெரவள்ளியிலிருக்கும் கிராமப் புனருத்தாரண வேலை சூபர்வைஸர் காரியாலயத்தை சௌகரியத்தை உத்தேசித்து இவ்விரண்டு தாலுகாக்களுக்கும் மத்தியிலிருக்கும் நிடதவோலுக்கு மாற்றவேண்டுமென்று இம்மகாநாடு ஜில்லா போர்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

7. வேலிவெண்ணுக்கிராமத்தில் உள்ள ஜாதிப்புரம் போக்கு ரஸ்தா கிராம A பட்டியலில் லோகல்போர்டு ரஸ்தாவென்றிருந்தும், அதைப் பஞ்சாயத்தார்

புதுப்பித்ததை ஆக்ஷேபித்து தெனுக்குஜில்லா முன்ஸீப்கோர்ட்டில் ஜமீன்தார்கள் பிராது போட்டிருப்பதைக்கண்டு இம்மகாநாடு வருந்துகிறது. ஜில்லாபோர்டும் அதன் தலைவரும் இவ்வழியில் பஞ்சாயத்துக்குத் தக்க உதவிபுரியுமாறு இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

8. தீண்டாமையை ஒழித்துவிடவேண்டுமென்று இம்மகாநாடு பஞ்சாயத்துகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

9. தீண்டாதவர்களுடைய கல்வி, சுகாதாரம், போக்குவரத்து முதலிய சௌகரியங்கள் செய்துகொடுப்பதற் கேற்றவழியில் பஞ்சாயத்துகள் தங்கள் பொக்கிஷம், அதிகாரம், பிரயாசைகளை உபயோகிக்க வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

10. சமீபித்துவரும் லோகல்போர்டு தேர்தல்களில் சிலதலைவர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற் கனுகூலமான வகையில் வட்டங்களைப்பிரிக்க முயன்று வருகிறார் என்ற வதந்திக்கு இடம் கொடுக்காமல் கவர்ன்மெண்டு வட்டங்களை உள்ளூர் ஸென்ஸ், விஸ்தீரணம், ஜனத்தொகை முதலியவற்றை ஆதாரமாகக்கொண்டு பிரிவினை செய்யவேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

12. வரிப்பாய்ச்சல் வாய்க்கால்களை மேல்பாகத்தில் மராமத்து பார்க்கும் வேலையைப் பஞ்சாயத்துகளிடம் குத்தகையாக விடவேண்டுமென்று இம்மகா நாடு கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளுகிறது.

13. பிரதி வருஷமும் ஜில்லா போர்டில் வேலை பார்க்கும் கிராமப் புனருத்தாரண வேலை விவர யாதாஸ்தைப் பத்திரிகைகளிலும் பஞ்சாயத்து விளம்பரப் பத்திரிகையிலும் பிரசுரிக்கவேண்டுமென்று இம்மகாநாடு ஜில்லா போர்டுதலைவரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

14. பஞ்சாயத்து பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கப்படும் மாத போதனை கிராண்டுத் தொகையைப் பஞ்சாயத்துத தலைவரிடமோ அல்லது அவருத்தரவு பெற்றவரிடமோ கொடுக்குமாறு சப் கஜானா அதிகாரிகளுக்கு உத்திரவிடவேண்டுமெண்டுமென்று லோகல் போர்டு இன்ஸ்பெக்டரை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

15. கிராம முன்னேற்ற வேலை விஷயமாகத் தகுந்த யோஜனை கூறுவதற்காக ஜில்லா போர்டுகளிலும் தாலூகா போர்டுகளிலும் பஞ்சாயத்துப் பிரதிநிதிகளிருக்க வேண்டிய தவசியமென்று இம்மகாநாடு எண்ணுகிறது. இருந்தாலும், தற்சமயம், வரப்போகிற தேர்தலில் பஞ்சாயத்துச் சங்கங்கள் தகுந்த அபேக்ஷகர்களை நிறுத்தவேண்டுமென்று யோஜனை கூறுகிறது.

16. சென்ற 6—1—32-ல் கவர்ன்மெண்டு லோகல் போர்டு முனிஸிபாலிடி இலாகாவின் மூலம் பிறப்பித்த உத்தரவு நெ. 49 புனராலோசனை செய்து, பஞ்சாயத்து சப்பந்தப்பட்ட எல்லா உத்தரவுகளையும் தாய் பாஷையிலேயே வெளியிடவேண்டு மென்று இம்மகாநாடு கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளுகிறது.

16213

# பொது விளம்பரம்.

தாலூகா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள் பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து, கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிரூபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவு மிருத்தல்வேண்டும். கொஞ்சமிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு ஏதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிரூபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிரூபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்

## கேரள சந்தனச் சோப்பை வாங்குங்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் வீட்டிலும் சுகத்தையும் ஆனந்தத்தையும் அளிக்கும் சோப்பு இதுவே.

மிகவும் சிறந்த நறுமணம் பொருந்தியது

கோடையில் மிகுந்த குளிர்ச்சியையும், பரிமளத்தையும் கொடுக்கும்

வெகு சிறந்த சோப்பும் இதுவே.

கேரளச் சோப்பு இன்ஸ்டிடியூட்,
கள்ளிக்கோட்டை.

## இராஜவழி

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் கஷ்டங்களை நீக்கி ஆரோக்கிய ஐஸ்வரிய மென்னும் இராஜவழியில் நிறுத்துவது

### எங்கள் காம சாஸ்திரம்

ஆரோக்கியம், ஐஸ்வரியம் சுக சௌக்கியம் இவை தனை காட்டும் அரிய நூல் கேட்போருக்கு இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, சென்னை.



பத்திராதிபர்.—கனம். ஜி. ஹரிசர்வோத்தமராவ்-எம்.ஏ.
அச்சிடுவோர்.—மத்தியக் கூட்டுறவு அச்சு இயந்திரசாலை,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.